முன் வரவேண்டும். அதுபோல, இந்தப் பயிரைப் பயிரிடுகின்ற அனைத்து விவசாயிகளுக்கும் மத்திய அரசு வழங்குகின்ற மானியத்தைப் பெற்றுத் தரவும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்வலிக் கிழங்கைக் கொள்முதல் செய்து இத்தாலி, பிரான்ஸ், ஹங்கேரி மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அனுப்பி, அங்கிருந்துதான் அதை மருந்தாகத் தயாரித்து, பிறகு பல்வேறு நாடுகளுக்கு அனுப்புகின்றார்கள். மாநில அரசாங்கம் இதுபோன்ற கண்வலிக் கிழங்கு போன்றவற்றை இதுவரை கொள்முதல் செய்யவில்லை. இனியும் கொள்முதல் செய்யக்கூடிய அந்த வாய்ப்பு இல்லை. வேண்டுமானால், ஒரு சிறப்பு அம்சமாகக் கருதி, இதுபோன்ற வியாபாரிகள் Syndicate அமைத்துக்கொண்டு விலையைக் குறைத்து, வாங்க முற்படுகின்றபோது, மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே கொண்டு வந்து அவற்றை வைத்து, மறைமுகமான ஏலத்தின்மூலம் விற்கின்ற அந்த ஏற்பாட்டைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. அதற்கு விவசாயிகளும் ஒத்துக்கொள்ள வேண்டும். *(குறுக்கீடுகள்)*

முற்பகல் 11-45

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். இன்றைக்கு இவ்வளவுதான் முடியும். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

***திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2009-2010* ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் *202* முதல் *212* வரையிலான *11* அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.